ரொமேனியாவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் சூப்பர்பெட்

# செஸ் கிளாசிக் 2025 பட்டத்தை வென்ற பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

ரொமேனியாவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் சூப்பர்பெட் செஸ் கிளாசிக் 2025 பட்டத்தை வென்ற பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**ரொமேனியாவில் நடைபெற்ற பெருமைமிக்க ‘சூப்பர்பெட் செஸ் கிளாசிக் 2025’ போட்டியில் வாகைசூடி, தனது முதல் கிராண்ட் செஸ் டூர் பட்டத்தை வென்றுள்ள ‘நமது சென்னையின் பெருமிதம்’ கிராண்ட்மாஸ்டர் திரு. பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்துகள்.**

**கிளாசிக்கல் மற்றும் பிளிட்ஸ் சுற்றுகளில் அசாதாரணமான அமைதியையும் உத்திமிகுந்த ஆழத்தையும் அவரது திறமையான ஆட்டம் வெளிப்படுத்தியது. இந்திய சதுரங்கத்தின் குறிப்பிடத்தக்க இந்த தருணத்தை தமிழ்நாடே கொண்டாடுகிறது!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சைதாப்பேட்டைத் தொகுதியில் இயங்கி வரும் கலைஞர் கணினி மையத்தின் சார்பில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்ற, 10ஆம் வகுப்பில் 400லிருந்து 500 மதிப்பெண் பெற்ற 140 மாணவமாணவியர்களுக்கும், 12ஆம் வகுப்பில் 500 லிருந்து 600 மதிப்பெண் பெற்ற 189 மாணவ–மாணவியர்களுக்கும் ஆக, 329 மாணவமாணவியர்களுக்கு தலா ரூ.2000 ரூபாயும், சான்றிதழ் மற்றும் கல்வி வழிகாட்டல் புத்தகமும் வழங்கினார். இந்நிகழ்வில் முன்னாள் தமிழ்நாடு காவல்துறையின் தலைமை இயக்குநர் முனைவர் சைலேந்திரபாபு, பட்டிமன்ற பேச்சாளர் புலவர் மா.இராமலிங்கம் மற்றும் ஆனந்தம் கல்விக்கட்டளை நிறுவனர் ஆனந்தம் செல்வக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

சென்னை சைதாப்பேட்டையில்

# 154 மகளிர்களுக்கு தலா ரூ.1 லட்சம் மானியத்துடன் கூடிய ஆட்டோக்கள்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - சி.வெ. கணேசன் வழங்கினர்!

சென்னை, மே 18-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை, சைதாப்பேட்டையில், 154 மகளிர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் மானியத்துடன் கூடிய ஆட்டோக்கள் வழங்கும் விழா மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்து விழா பேரூரையாற்றினார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் நேற்று (17.05.2025) சென்னை, சைதாப்பேட்டையில், 154 மகளிர்களுக்கு தலா ஒரு லட்சம் மானியத்துடன் கூடிய ஆட்டோ வழங்கும் நிகழ்ச்சியை கொடியசைத்து துவக்கி வைத்து விழா பேரூரையாற்றினார்கள்.

பிறகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆற்றிய உரை வருமாறு:

“தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் முன்னேற்றத்திற்காக செய்து கொண்டிருக்கக்கூடிய திட்டங்கள் உலக அளவில் பாராட்டக்கூடிய திட்டங்களாக உள்ளது. “மகளிருக்கு வழங்கப்படும் ஆட்டோக்களை 100% மகளிரே ஓட்டுவது மிகப்பெரிய தலைமை பண்பை பெற்றுதரும். மகளிர் உரிமைத் தொகை திட்டம் ஒரு கோடியே 15 லட்சம் மகளிர் வாழ்வில் மகிழ்ச்சி வெள்ளத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மகளிர் இடத்தில் மிகப்பெரிய மனநிறைவை ஏற்படுத்தி உள்ளது. 700 கோடி பயணங்களை மகளிர் விடியல் பயணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது, பெண்களுக்காக ஒரு பொருளாதாரப் புரட்சியே தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த தொகுதியில் 419 மகளிரும், 200 ஆண்களும் என 619 பேர் ஆட்டோக்களைப் பெற்று தொழில் முனைவோர்களாக மாறியுள்ளனர்.

இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகு சைதாப்பேட்டை தொகுதியில் கடந்த 2023-ஆம் ஆண்டு மகளிர்களுக்கு ரூ.1 இலட்சம் மானியத்துடன் 151 ஆட்டோக்களும், 2024-ஆம் ஆண்டில் 200 ஆண்களுக்கு ரூ.40,000/ சலுகை விலையிலும், 08.03.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மகளிர்களுக்கு ரூ.1 இலட்சம் மானியத்துடன் கூடிய 75 பிங்க் ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 03.03.2025 அன்று 39 ஆதிதிராவிட பயனாளிகளுக்கு ஆட்டோக்கள் ரூ.1 இலட்சம் மானியத்துடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சாலைகளில் ஏராளமான மகளிர் பவனி வருகிறார்கள், மகளிரே முடிந்த வரை 100% நீங்களே ஓட்டக்கூடிய சக்திகளை பெற வேண்டும், அப்போதுதான் உங்களுக்கு மிகப்பெரிய தலைமை பண்பு கிடைக்கும், சமுதாயத்தில் பலதரப்பட்ட மக்களை உங்களால் சந்திக்க முடியும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் விழா பேரூரையாற்றினார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் ஆற்றிய உரை வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2000-ஆம் ஆண்டு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு என 9 வாரியங்களை உருவாக்கினார். இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகு 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் பதிவு செய்து பலன் அடைந்து வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக நீதி மற்றும் பெண்கள் முன்னேற்றம் இரண்டையும் இரு கண்களாக கருதி பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார். அவற்றில் ஒன்றுதான் மகளிர் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ரூ.1 இலட்சம் மானியம் வழங்கும் திட்டம். இத்திட்டத்தின் மூலம் கடந்த ஆண்டு 1000 மகளிர்களுக்கு ரூ.1 இலட்சம் மானியம் அறிவிக்கப்பட்டு, இதுவரை 545 நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்று சைதாப்பேட்டை தொகுதியில் 154 மகளிர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் மானியத்துடன் கூடிய ஆட்டோ வழங்கப்பட்டுள்ளது. மகளிரை தொழில் முனைவோர் ஆகவும், சுயமாக தொழில் செய்து ஆட்டோ ஓட்டுநராக தன்னம்பிக்கை வளர்க்கும் வகையில் இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள் என்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் அவர்கள் விழா பேரூரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம் கணபதி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஸ்ரீதரன், தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் பாஸ்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு 42ல் அமைந்துள்ள தண்டையார்பேட்டை சென்னை பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவி ஏ.சோபனா பத்தாம் வகுப்பில் 491 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்று உள்ளார். இதனை அறிந்த மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, பள்ளிக்கு நேரில் சென்று பள்ளி மாணவிகளை பாராட்டி வாழ்த்து தெரிவித்து இரண்டாம் இடம் பிடித்த எஸ்.மாலினி மூன்றாம் இடம் பிடித்த வி.ராணி ஆகியோருக்கு பரிசுத் தொகை, பொருள்கள் வழங்கி பாராட்டினார். உடன் எஸ்.ரேணுகா எம்.சி, வட்டக் கழக துணை செயலாளர்கள் ஜி.எம்.பிரபு, ப.தாமோதரன், தலைமை ஆசிரியர் எஸ்.கோகிலாகிரேசி, உதவி தலைமை ஆசிரியர் பி.கில்டா, பள்ளி ஆசிரியர் சி. மீனாட்சி, மற்றும் பெற்றோர்கள் பொதுமக்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இர. செங்குட்டுவன்

மே 18 (2021)



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிளைச் செயலாளராகவும், சித்தாமூர் ஒன்றிய பொறுப்பாளராகவும், மாவட்ட கலை,இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கொளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், சித்தாமூர் ஒன்றியக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.முரளி - கோ.வி.லெனின் பங்கேற்பு!

# 124 ‘அ’ வட்டக் கழக நிர்வாகிகள் - பாகப் பொறுப்பாளர்கள் கூட்டம்!

## வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா. அன்பு அறிக்கை!

சென்னை, மே 18

124 அ வட்டக் கழக சார்பில் வட்ட நிர்வாகிகள் பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (18.05.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில், மயிலாப்பூர் பகுதி கழக அலுவலகத்தில் 124.அ வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா. அன்பு எனது தலைமையில் நடைபெறுகிறது.

பகுதி கழகச் செயலாளர் எஸ் .முரளி, தொகுதி பார்வையாளர் கோ.வி. லெனின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.

கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்.

இக்கூட்டத்தில் 124.அ வட்டக் கழகத்தை சார்ந்த. பாக முகவர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா. அன்பு தெரிவித்துள்ளார்.

# விரைவில் புதிய 20 ரூபாய் நோட்டுகள் அறிமுகம்!

## ரிசர்வ் வங்கி அறிவிப்பு!

புதுடெல்லி, மே 18 –

விரைவில் புதிய 20 ரூபாய் நோட்டை அறிமுகம் செய்ய உள்ளதாக, இந்தியன் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. இந்தியாவில் 500, 200, 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுகள் தற்போது புழக்கத்தில் உள்ளன. பணமதிப்பிழப்பு நடவடிக்கையை தொடர்ந்து புதிய 500 மற்றும் 200 ரூபாய்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இருப்பினும், சில்லறை தட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், புதிய 20 ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் வங்கி விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. புதிய வடிவத்தில் மகாத்மா காந்தி படம் அடங்கிய இந்த ரூபாய் நோட்டு விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மாலோத்திரா, கையொப்பத்துடன் கூடிய 20 ரூபாய் விரைவில் வெளியிட உள்ளது.

சில்லறை பற்றாக்குறை இருப்பதாக வணிகர்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்ட நிலையில், புதிய 20 ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் வங்கி அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, எம்.பி. பங்கேற்பு!

# சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டக்கழக செயற்குழுக் கூட்டம் 19-05-2025 அன்று திங்கள்கிழமை மாலை 3.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் Dr.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், சட்டமன்றதொகுதி பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழகச்செயலாளர்கள்,இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்க பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

